
# இஸ்லாமியக் குறள்



மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியக் குறள்

**மூதூர் - எம்.எம்.ஏ.அனஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


❖ நூலின் பெயர்:- இஸ்லாமியக் குறள்

❖ விடயம் :- கவிதை

❖ ஆசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

❖ வெளியீடு :- மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்

❖ அட்டைப்படம் :- B.நிஷாந்

❖ உரிமை :- நூலாசிரியருக்கு

❖ முதற்பதிப்பு :- ஏப்ரல் 2015

❖ பிரதிகள் :- 500

❖ ISBN :- 978-955-41569-2-0

❖ விலை :- 200/=





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மூதூரில் நல்ல குரு நாதராய்
நனிசிறந்த அதிபராய்த் திகழ்ந்த
என் நேசத்துக்குரிய ஆசிரியர்
ஏ.சீ.எம். மக்கீன் அவர்களுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இஸ்லாம் இயம்பும் இன்னருந் தத்துவங்களில் சிலதை ஒருவிகற்பக் குறள்வெண்பா வடிவில் யாத்திடத் துணிந்தேன். காரணம் இஸ்லாத்தின் கொள்ளைகள் இஸ்லாமிய நூல்களாகவும் திருக்குர்ஆன் தெளிவுரை நூல்களாகவும், புனித ஹதிஸ் நூல்களாகவும் நிறைய நூலுருவில் வெளிவந்திருந்தாலும் அவற்றைத் தமிழ் மொழி கற்ற பிறமதத்தவர்கள் வாசித்தறிய ஆர்வம் காட்டுவது மிகமிகக் குறைவு. ஆனால் இத்தகைய கொள்கைகள் குறள், வெண்பா, கவிதை வடிவில் எழுதப்படுகின்ற போது தமிழ் மொழியைக்கற்கின்ற பல்கலைக்கழக மாணவர்களும் தமிழ் மொழி ஆர்வலர்களும் தமிழாராச்சி அறிஞர்களும் இவற்றைப் படிக்கக்கூடிய நிலையேற்படும். இதன் மூலம் அவர்களும் இஸ்லாமிய நெறிகள் பற்றி அறிந்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இவ்எண்ணம் என் இதயப்பரப்பில் ஊற்றெடுத்தபோது பிறந்தது தான் "இஸ்லாமியக் குறள்" என்னும் இந்நூலாகும்.7

இஸ்லாமியக் கொள்கைகளைக் குறள்வெண்பா இலக்கண விதிகள் மீறப்படாத வகையில் குறள் வடிவில் கூறுவதென்பது மிகவும் கடினமான விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் நானும் குறள்வெண்பா விதிகளைப் பின்பற்றி ஒருவிகற்பக் குறள் வெண்பாக்களை யாத்து" இஸ்லாமியக் குறள்" எனும் நூலாக வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகில் தமிழ் மொழியில் இதுவரை வெளிவந்த நூல்களில் இஸ்லாமியக் கொள்கை நெறிகள் கவிதை வடிவிலும், பாடல் வடிவிலுமே அதிகம் வெளிவந்துள்ளன. இவைகள் குறள், வெண்பா, வடிவில் வெளிவந்தமை மிகமிகக்குறைவு.

எனது இந்நூல் ஓரளவாவது இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் என நம்புகின்றேன். இந்நூலுக்கான அட்டைப்படம் வடிவமைத்த டீ.றினேஸ்காந்த் அவர்களுக்கும் இந்நூலை வெளியீடு செய்ய மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்திற்கும் என் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**எம்.எம்.ஏ.அனஸ்**

**10.04.2015**

**பெரிய பாலம்**

**மூதூர் - 05**

**தொடர்பு :- 0776288299**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியக் குறள்

1. அன்பில் அருளில் அளவிலா அல்லாஹ்வை
நன்கே உளத்தில் நிறுத்து

பொருள் :தன் படைப்பின் மீது அன்பு செலுத்துபவனும்
அளவில்லா அருளைச் சொரிபவனுமாகிய
அல்லாஹ்வை நன்றாக உன் உளத்தில் நிறுத்து.

2. செயலெல்லாம் உற்றறிந்து சீர்மையாய் நோக்கும்
உயரிறை ஒன்றாம் உணர்

பொருள்:- இவ்வுலகத்தில் நிகழ்கின்ற எல்லாச் செயல்களையும்
நன்கறிந்து, நோக்கிக் கொண்டிருக்கின்ற இறைவன்
ஒருவனே என்று உணர்ந்து நட

3. நிச்சயமாய் வானம் நெடுநிலத்து ஆட்சியெலாம்
உச்ச இறைக்கே உரித்து

பொருள் :- வானம், பூமி, ஆகியவற்றின் ஆட்சிஅதிகாரம் யாவும்
உயரிய இறைவன் ஒருவனுக்குத்தான் உரித்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **அல்லாஹ்வை அன்றி அடிபணிய வேறிறைவன்
இல்லையென என்றும் இயம்பு**

பொருள்:- இவ்வுலகத்தில் நாம் அடிபணிவதற்கு அல்லாஹ் ஒருவனைத்தவிர வேறு இறைவன் கிடையாது என்று சொல்

5. **அண்ணல் நபிபெருமான் அல்லாஹ்வின் தூதுவரில்
மண்ணுலகில் முற்றாம் மொழி**

பொருள்:- முகம்மது நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகில் தோன்றிய இறைவனின் தூதர்களில் இறுதியானவர் என்று சொல்

6. **மறுமையின் நாளதனில் மற்றோர்க்கோ யாரும்
உறுதுணை ஆகார் உணர்**

பொருள்:- உலகம் அழிந்து எல்லோரும் மீள உயிர் பெற்று எழுப்பப்படுகின்ற அந்த மறுமை நாள் வேளையில் யாரும் யாருக்குமே உதவி செய்ய முடியாத நிலை காணப்படும். ஒவ்வொருவரும் தனக்காகவே இறைவனிடம் வேண்டிக் கொண்டிருப்பார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **தீயோர்க்கோ அச்சமூட்டன் தக்கதாம் எச்சரிக்கை**
**தூயோனின் தூதர் தெரி**

பொருள் :- தீயோர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராக அல்லாஹ்வுடைய தூதர் உள்ளார் என்பதை அறிந்து கொள்.

8. **தானுமே நாடிய தக்க நரர்க்கிறையும்**
**ஈனுமே நேர்வழி ஈங்கு.**

பொருள்:- இறைவன் தான்நாடிய மனிதர்களுக்கு நேர்வழியைக் காட்டுவான்.

9. **புறமது பேசிப் புவியில் திகழ்வோர்**
**அறவழி அற்றோராம் ஆய்**

பொருள் :- இவ்வுலகில் புறம்பேசித் திரிவோர்கள் அறநெறியில் வாழாத மனிதர்கள் என்று புரிந்துகொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.** **இறைவனுக்கே நன்றியது இல்லாது மாந்தர்**
**கறைகொண்டு வாழ்வதுவும் காண்**

**பொருள் :-** மனிதர்கள் இறைவனுக்குக்கூட நன்றி செலுத்தாது பிழையான நெறியில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் கண்டு கொள்

**11.** **நிச்சயமாய் மாந்தன் நெடுநிலச் செல்வத்தில்**
**இச்சையே கொண்டோன் இயம்பு**

**பொருள்:-** நிச்சயமாக மனிதர்கள் இவ்வுலகச் செல்வத்திலே ஆசை கொண்டவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.

**12.** **உலக முடிவில் உயர்மலையும் பஞ்சாய்த்**
**துலங்கும் நிலையே தெரி**

**பொருள்:-** உலகம் அழிந்து போகின்ற அந்த நாளிலே உயரிய கல்மலைகள் கூடத் துகள்களாகிப் பஞ்சைப் போன்று ஆகிவிடும் என்பதை அறிந்து கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. இறுதித் தினத்திலே ஈசலாய் மாந்தர்
குறுகிச் சிதறுவர் கூறு

பொருள்:- மறுமை நாளிலே மனிதர்கள் ஈசலைப் போன்று சிதறிய நிலையில் காணப்படுவர்

14. இறையச்சம் கொண்டே இறை நினைவில் வாழ்வோர்
கறையிலா மேலோரே காண்

பொருள்:- இறைவனுக்குப் பயந்து அவன் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடத்தில் கெட்ட தன்மைகள் எதுவுமே இருக்காது அவர்கள் உன்னதமானவர்கள்.

15. அல்லாஹ்வை அன்றி அடுத்தவர்க்கோ அஞ்சிடுதல்
நல்லதே அல்ல நவில்

பொருள்:- இறைவனைத்தவிர வேறுயாருக்கும் பயந்து நடக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பொறுமை தொழுகையைப் பேணியே நீயும்
பெறுவாய் பெரியோனின் பேறு

பொருள்:- பொறுமையைக் கடைபிடித்தும் தொழுகையை பேணுதலாக ஒழுங்காக நிறைவேற்றியும் வருகின்ற போது இறைவனுடைய அருளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

17. மாந்தர்கள் மீதினில் மாகருணை தன்னையே
ஈந்திடுமாம் நாயன் இயம்பு

பொருள்:- மனிதர்கள் மீது இறைவன் தன்பெரும் கருணையை அளித்துக்கொண்டிருக்கின்றான்.

18. எல்லாப் பிழைகளையும் என்றும் பொறுத்திடவே
நல்லருளோன் நாயனை நாடு.

பொருள்:- செய்திட்ட எல்லாப் பிழைகளையும் மன்னித்தருளுமாறு அருளாளனாகிய அல்லாஹ்விடம் கேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பெற்றவன் பேற்றைப் பெரியோன் மறுமையில்
பற்றி வினவுவான் பார்..

பொருள்:- இறைவன் உனக்கு வழங்கிய அருட்கொடைகள் பற்றி நாளை மறுமையிலே கேள்வி கணக்கு கேட்பான் என்பதை புரிந்துகொள்.

20. இரக்கவே வந்திடும் இல்லா நபரை
விரட்டும் செயலை விலக்கு

பொருள்:- உன்னிடம் தருமம் கேட்டு வந்திடும் வறுமைப்பட்ட நபர்களுக்கு உதவி செய்யாமல் அவர்களை விரட்டுகின்ற செயலைத் தவிர்த்திடு. அவர்களுக்கு உன்னால் இயன்ற உதவிகளைச் செய்.

21. மாந்தர்தம் செல்வமும் மக்களும் சோதனையாய்
ஈந்தான் இறையும் இயம்பு

பொருள்:- ஓர் மனிதனுக்கு அவனுடைய செல்வமும் அவனுடைய மக்களும் அவனுக்குச் சோதனையாகத்தான் இறைவன் கொடுத்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22.** **இறைமீது நம்பிக்கை இப்பதிகொள் மாந்தர்**
**நிறையுறுவர் வாழ்வில் நினை**

**பொருள்:-** இறைவன் மீது உறுதியான நம்பிக்கை கொண்ட மக்கள் தம் வாழ்வின் எல்லா விடயத்திலும் இறைவனே போதுமானவன் என மன நிறைவு கொள்வர்.

**23.** **செல்வத்தில் தன்னில் சிறுநிலை கொண்டோரை**
**நல்முறையாய் ஆய்ந்து நட..**

**பொருள்:-** தன்னை விடவும் செல்வத்தில் கீழ் நிலையில் உள்ளவர்களைப் பற்றியே நோக்க வேண்டும்.

**24.** **இறையைத் தரிசிக்கும் இச்சை கொள்வோரை**
**இறைகாண நாடும் இயம்பு.**

**பொருள்:-** ஒரு மனிதன் இறைவனைக் காணவேண்டும்என ஆசையுறும் போது அந்த மனிதனைக்காண இறைவனும் விரும்புகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. **இறைவனுக்காய் தன்னையே தாழ்த்துவோன் தன்னை இறையும் உயர்த்தும் இயம்பு**

**பொருள்:-** இறைவனுக்காகத் தன்னை தாழ்த்திக்கொள்ளும் மனிதனை இறைவன் நிட்சயமாக உயர்த்துவான்.

26. **தன்னடக்கம் ஈமானின் தக்ககிளை ஒன்றென நன்றே அறிந்து நட**

**பொருள்:-** தன்னடக்கமுடன் நடந்துகொள்ளுதல் இறை நம்பிக்கையின் ஒரு பகுதியாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே தன்னடக்கத்தை நன்றாக பேணி நடந்து கொள்.

27. **அண்டை அயலார் அகமகிழும் நல்லோனாய் மண்மீதில் உன்வாழ்வை மேவு**

**பொருள்:-** அண்டை அயலார்கள் உன்னால் மகிழ்ச்சியடை பவர்களாகவும் அவர்கள் உன்னை நல்லோன் என்று உரைக்கக்கூடியபடியும் உலகில் வாழ்தலே மேலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. **அகதி கதியிலார் ஆனோரைக் காக்கும்**
**இகத்தில்லம் மேலாம் இயம்பு**

**பொருள்:-** அகதிகளையும் அனாதைகளையும் ஆதரிக்கின்ற வீடுதான் உலகத்தில் மேலானது.

29. **பெற்ற கடன்தன்னைப் போக்காத மாந்தர்கள்**
**உற்றபெரும் கள்வர் உணர்**

**பொருள்:-** பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்போர்கள் திருடரைப் போன்றவர்கள்.

30. **ஆத்திரம் தாங்கி அடக்கிடும் மாந்தனைக்**
**காத்திர வீரனாய்க் காண்.**

**பொருள்:-** கோபம் வருகின்றபோது பொறுமையுடன் அதை அடக்கிடும் மனிதன் பெரும் வீரனாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. மேலான தர்மமோ மண்ணுலகில் நல்லமைதி
மேலோங்கச் செய்தல் மொழி.

பொருள்:- இவ்வுலகில் அமைதி நிலை கொள்ளச் செய்வது உயரிய தர்மமாகும்.

32. ஈன்றெடுத்த பெற்றோரை இப்புவியில் சீயென்றும்
தான்உரைக்க வேண்டாம் தெரி.

பொருள்:- பெற்றோர்களுக்கு "சீ" எனும் வெறுப்பான வார்த்தையைக் கூட நாம் உரைக்கக்கூடாது.

33. வயதான பெற்றோரால் வல்லோன் அருளின்
பயனதைப் பெற்றிடான் பாவி.

பொருள்:- வயதான பெற்றோர் ஒருவனுக்கு கிடைக்கப்பெற்று அவன் அப்பெற்றோர்களை நன்கு பேணி இறைவனின் திருப்தியை பெற வில்லையாயின் அவன் பெரும் பாவியாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. மகன்சொர்க்கம் மாதா மலரடி கீழாம்
நிகரில்லாத் தாய்மையை நினை

பொருள்:- தாயின் பாதத்தின் கீழ்த்தான் ஓர் மைந்தனுக்கு சொர்க்கம் அமைந்திருக்கின்றது. தாயை நன்கு பேணுவதன் மூலமே மைந்தன் சொர்க்கத்தை அடைய முடியும்.

35. துறந்து உறவாரைத் தூரமாய் வாழ்வோர்
பெறமாட்டார் நாயனருள் பார்

பொருள்:- ஒருவன் தன் உறவினர்களுடன் நல்முறையில் உறவைப் பேணி நடக்காமல் அவர்களை விட்டும் தூரமாகி வாழ்ந்தால் அவன் இறைவனுடைய அருளைப் பெறமாட்டான்.

36. இறைதோற்றம் செல்வம் இவைதன்னை நோக்கான்
நிறையுளம் பார்ப்பான் நினை

பொருள்:- இறைவன் ஒரு மனிதனுடைய தோற்றத்தையோ செல்வத்தையோ பார்க்கமாட்டான். மாறாக அவனுடைய உள்ளத்தைத்தான் பார்ப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37.** **நிலத்தில் ஒருவரை நாடல் வெறுத்தல்**
**நலமாம் இறைக்காய் நவில்**

**பொருள்:-** இவ்வுலகில் ஒரு மனிதன் மற்ற மனிதனை இறைவனுக்காக விரும்புவதும் இறைவனுக்காகவே வெறுப்பதும் மேலான செயலாகும்.

**38.** **மனிதர்தம் நன்மைக்காய் மண்ணில்செய் சேவை**
**இனிதாம் மறுமைக் இயம்பு**

**பொருள்:-** மனிதர்களுடைய நன்மைக்காக உலகில் ஒருவர் செய்கின்ற சேவைகள் மறுமையில் அவருக்கு நன்மைபயக்கும்.

**39.** **சிறிதளவே ஆயினும் செய்நன்மை தீமை**
**அறிவாயே அவ்வுலகில் ஆய்.**

**பொருள்:-** இவ்வுலகில் ஒருவர் செய்கின்ற நன்மை, தீமை சிறிய அளவேதான் ஆயினும் அதனுடைய பிரதிபலனை மறுமையில் அடைந்துகொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**40.** **இறைபொருத்தம் நாடி இனத்தார்க்காய்ச் செய்யும்**
**முறைச்செலவு தர்மம் மொழி**

**பொருள்:-** இறைவனுடைய பொருத்தத்தைநாடி தனது குடும்பத்தவர்களுக்காக ஒருவர் செய்கின்ற செலவு தர்மமாக அமையும்.

**41.** **பிறர்செலவைச் செய்திடும் பண்பார்க்காய் நாயன்**
**சிறப்பாகச் செய்யும் செலவு.**

**பொருள்:** பிறருக்காகச் செலவு செய்யும் மனிதருக்கு இறைவனும் உதவி புரிவான்.

**42.** **ஏழைகைம் பெண்களுமே ஏற்றமுற என்றும்**
**உழைப்போர் அறப்போரார் ஊக்கி**

**பொருள்:** ஏழைமக்களும் கைம்பெண்களும் ஏற்றமடைவதற்காய் உழைப்பவர்கள் புனிதப்போர் புரியும் வீரர்கள் போன்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. மதுசூது மற்றும் மடமைக் குறிகள்
இதுகூடா என்கும் இறை

பொருள்: மதுவருந்தல், சூதாடல், குறிகேட்டல் இவைகளை இறைவன் வெறுக்கின்றான்

44. ஓர்முஸ்லிம் இன்னலின் ஒப்பாக அன்னோனின்
பார்பாவம் குன்றியே போம்

பொருள்: உலகில் ஓர் முஸ்லீம் அனுபவிக்கின்ற துன்பத்திற்கு நிகராக அவனுடைய பாவங்களை இறைவன் மன்னிக்கின்றான்.

45. நன்மையை நாயனும் நாடும் நபர்களுக்கோ
என்றுமே சோதனைதான் எண்ணு.

பொருள்: இறைவன் ஒருமனிதனுக்கு நன்மைசெய்ய நாடிவிட்டால் அம்மனிதனுக்குப் பல சோதனைகளை (துயர்களைக்) கொடுப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. **நோய்க்காம் மருந்தின்றி நாயனவன் யார்எவர்க்கும்**
**ஈய்வதில்லை நோய்யை இயம்பு.**

**பொருள்:** நோய்க்குரிய மருந்தின்றி இறைவன் எவருக்கும் எந்தநோய்களையும் கொடுப்பதில்லை.

47. **கருஞ்சிரகம் சாவைக் கடந்து பிறநோய்ப்**
**பெருமருந்தாய் ஆகும் பகர்.**

**பொருள்:** கருஞ்சிரகம் மரணத்தைதவிர மற்றைய எல்லா நோய்க்கும் மருந்தாகும்.

48. **உன்மகவு பெற்றோர் உவப்பை விடவுமே**
**நன்றாய் நபிமணியை நேசி**

**பொருள்:** உன்னுடைய குழந்தைகள்,பெற்றோர்கள், மீது நீ காட்டும் உவப்பை விடவும் நபி(ஸல்) அவர்கள் மீது அதிகம் நேசம் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**49.** **எண்ணம் பொறுத்தேதான் எல்லாச் செயல்ப்பலனும்**
**திண்ணம் உளதாம் தெரி.**

**பொருள்:** ஒரு மனிதனின் எண்ணத்தைப் பொறுத்துத்தான் அவனுடைய செயல்களின் பலன்கள் அமைந்துள்ளன.

**50.** **தன்கரத்தால் தான்உழைத்துத் தின்னும் உணவேதான்**
**உன்னதம் ஆகும் உணர்.**

**பொருள்:** பிறரின் உழைப்பில் உண்டு வாழ்வதைவிட ஒருவன் தன் உழைப்பால் உண்டு வாழ்வதுதான் உயரியது.

**51.** **கடனதனை மீட்டுகையில் கண்ணியம் மென்மை**
**நடத்தையே நன்றாம் நவில்**

**பொருள்:** ஒருவருக்குக் கொடுத்த கடனை மீளக் கோருகையில் கடன்காரனிடம் கண்ணியமாகவும் மென்மையான முறையிலுமே நடந்து கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. வியர்வை உலருமுன் வேலையாள் கூலி
உயர்வாம் வழங்கல் உணர்

பொருள்: கூலியாளின் வியர்வை உலர்வதற்கு முன்பு அவனது வேதனத்தை கொடுத்துவிடல் வேண்டும்.

53. தனயர்க்குத் தந்தை தருசெல்வம் கல்வி
கனஒழுக்கம் என்றே கருது.

பொருள்: ஒரு தந்தை தன் மகனுக்கு வழங்கும் கல்வியும் நல்லொழுக்கமும் தான் உயரிய செல்வமாகும்.

54. நட்ட மரத்தால் நரர்பறவை நன்மையுறின்
நட்டவர்க்கே நன்மை நவில்

பொருள்: ஒருவர் மரமொான்றை நட்டால் அதிலிருந்து மனிதர்களோ பறவைகளோ பலனடைவார்களாயின் அம்மரத்தை நட்டவர்களுக்கே நன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. பக்கத்து வீட்டார் பசித்திருக்கத் தான்உண்ணல்
தக்க செயலாகா தான்

பொருள்: பக்கத்து வீட்டார்கள் உணவின்றி வாடுகையில் தான் மட்டும் புசித்திடுதல் நற்செயலாகா. அவர்களுக்கும் கொடுது உண்ணல் வேண்டும்.

56. இறைமறுமை நன்கேற்றோர் ஈயும் விருந்தால்
நிறையுறுவர் தானே நினை

பொருள்: இறைவனையும் மறுமைநாளையும் நம்பிக்கை கொண்டோர்கள் பிறருக்கு வழங்கும் விருந்தோம்பலால் மகிழ்வுபெறுவர்.

57. பசிகொள் ஒருத்தன் பசிபோக்க உண்டி
புசிக்கக் கொடுசெயல் பேண்

பொருள்: பசிக்கொடுமையில் வாடுகின்றவர்களுக்கு உணவு வழங்குகின்ற நற்காரியத்தைச் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. யாசித்து வந்தவரை யாதேனும் ஈந்தனுப்பின்
நேசிக்கும் நாயகனும் நம்பு

பொருள்: யாசகம் கேட்டு வருவோர்க்கு மறுக்காமல் ஏதேனும் கொடுப்பவர்களை இறைவன் விரும்புகின்றான்.

59. நோய்கொண்ட மாந்தரினை நாடி நலமறியும்
தூய்மையாம் பண்பில் துலங்கு

பொருள்: நோயுற்றவர்களைச் சென்று பார்த்து அவர்களுடைய நலன்களை கேட்டறியும் நல்ல பண்பைக் கடைப்பிடித்து வாழ்.

60. பெருமையே கொண்டிடுவோன் பொற்பதி ஏகான்
பெருமிடர் தானடைவான் பேசு

பொருள்: பெருமையடிப்பவன் சுவர்க்கம் செல்லமாட்டான் பெரும் துன்பத்தை அடைவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. **உடல்நலம் செல்வம் உடைமையாய் ஆயின்**
**கடமையாய்க் கஜ்ஜைக் கருது.**

**பொருள்:** உடல்நலமும் செல்வமும் பெற்றவர்கள் கஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற வேண்டும்.
(புனித மக்க நகர்ப்பயணம்)

62. **பொருளும் பணமுமே போதுமாய் வாய்ப்பின்**
**கருதிச்செய் ஸக்காத் கடன்.**

**பொருள்:** போதியளவு பணமும், பொருளும் ஒருவருக்கு இருப்பின் அவர் ஸக்காத் என்னும் ஏழைவரியை வழங்கல் வேண்டும்.

63. **தினமைந்து வேளை தொழுகையைப் பேணி**
**தனமாம் சுவர்க்கத்தைத் தேர்**

**பொருள்:** ஒவ்வொர் நாளும் ஐந்துதடவைகள் தொழுது செல்வமென்றான சுவர்க்கத்தை தேர்ந்தெடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**64.** **நேர்த்தியாய் நோன்பதனை நோற்கும் மனிதர்க்கோ**
**ஓர்இறையின் கூலி உயர்**

**பொருள்:** றமழான் கால நோன்பை நேர்த்தியான முறையில் நோற்பவர்களுக்கு இறைவனிடத்தில் உயரிய நற்கூலி உண்டு.

**65.** **கொடுமை புரிவோர்க்கோ காட்டும் இசைவைத்**
**தடுக்குதே இஸ்லாம் தெரி**

**பொருள்:** கொடுமை புரிவோர்களுக்கு ஆதரவோ இசைவோ காட்டுவதை இஸ்லாம் மார்க்கம் தடுக்கின்றது.

**66.** **ஆத்திரம் வந்திடில் ஆங்கதைப் போக்குவோன்**
**காத்திர வீரனாம் காண்**

**பொருள்:** கோபம் வரும் வேளை அக்கோபத்தை அடக்கிடுவோனே உண்மையான வீரனாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. பழிக்காம் பலமிருந்தும் பாரில் பொறுத்தல்
எழிலென்றே என்றும் எடு

பொருள்: பழிவாங்குவதற்குரிய பலத்தைப் பெற்றிருந்தும் பழிவாங்காமல் பொறுமை காத்தல் ஏற்றமானது

68. மற்றோர் இடரில் மகிழ்வுறின் அவ்விடர்
பற்றிடுமே உன்னைப் புரி

பொருள்: பிறருடைய துன்பத்தைக் கண்டு மகிழ்வுறின் அத்துன்பம் உனக்கும் ஏற்படும் என்பதை புரிந்து கொள்.

69. கொடியோனைப் போற்றுகிற காரியத்தைக் காணின்
கடிந்திடுமே நாயனும் காண்.

பொருள்: கொடியவர்களை போற்றுகின்ற செயலை இறைவன் வெறுக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. வாக்குறுதி தன்னை வகையாகக் காக்கின்ற
நோக்குடன் நாளும் நட.

பொருள்: கொடுக்கும் வாக்குறுதியை நிறைவேற்றும் நன்நோக்குடன் என்றும் நடந்து கொள்.

71. கிட்டாது சொர்க்கமது கோள்சொல் நபர்க்கதனால்
விட்டிடு கோளை விரைந்து.

பொருள்: கோள் சொல்பவர்களுக்கு சொர்க்கம் கிடைக்காது. ஆதலால் கோள் சொல்வதைத் தவிர்த்து நட

72. பயணத்தில் மூவர்தான் பாங்காய் அமையின்
உயர்வாம் தலைமையை ஓம்பு

பொருள்: ஓர் பயணத்தில் மூன்று நபர்கள்தான் இருப்பினும் அவர்கள் அதில் ஒருவரை தலைவராக்கிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**73.** **மூன்றுபேர் காடதனை மேவியே வாழ்ந்திடினும்**
**தோன்றட்டும் ஓர்தலைமை தான்.**

**பொருள்:** மூன்று நபர்கள் ஒரு காட்டில் வாழ்ந்திடினும் அவர்கள் தங்களுக்குள் ஓர்தலைமையை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

**74.** **மதுப்பழக்க மாந்தரின் மேனிநலம் நோய்கள்**
**அதுவறியச் செல்லல் அகற்று**

**பொருள்:** மதுப்பழக்கமுடையோர்களின் உடல்நலம், நோய்கள், பற்றிய நலம் விசாரிக்க அவர்களைப் போய் பார்க்கும் செயலைத் தவிர்த்துக் கொள்.

**75.** **ஒருவர்க்காம் நன்மை உவந்திடின் நாயன்**
**திருமறையின் ஞானம் தரும்.**

**பொருள்:** இறைவன் ஒருவருக்கு நன்மை செய்ய நாடிவிட்டால் அவருக்கு திருமறையின் ஞானத்தை அருள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**76.** **நாணமது மாந்தர்க்கோ நன்மையே நல்குவதால்**
**நாணமுடன் வாழுவே நாடு**

**பொருள்:** வெட்கம் மனிதனுக்கு நன்மை பயப்பதனால் தீச்செயல் கண்டு நாணம் கொள்ளும் நிலையில் வாழ்.

**77.** **பொறுமையே காக்கப் பெரிதும் விளையின்**
**பெறுவாய் இறையருள்ப் பேறு**

**பொருள்:** பொறுமையைப் பெரிதாய் காப்பவர்களுக்கு இறைவனுடைய அருள்கிட்டும்

**78.** **பொறுமை பெருங்கொடையாம் பாரில் பலன்கள்**
**பெறுதற்கோ ஏதாம் பகர்.**

**பொருள்:** பொறுமையானது ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் பெருங்கொடையாகும். பல நன்மைகளை அடைவதற்கு அதுவே அடிப்படையாய் அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**79.** **மலர்முகமாய் சோதரனை மண்ணிலே நோக்கல்
நலமிக்க தர்மமாம் நம்பு**

**பொருள்:** மலர்ந்த முகத்துடன் ஓர் சகோதர மனிதனை நோக்குதல் உயரிய தர்மமாக அமையும்.

**80.** **வீதியின் முட்களை வாஞ்சையாய் நீக்கிடின்
ஆதி அவர்ட்கருளும் ஆய்**

**பொருள்:** வீதியில் கிடக்கின்ற முட்களை அகற்றுபவர்களுக்கு இறைவனின் உதவி கிட்டும்.

**81.** **வீண்விரயம் கர்வம் விலக்கி நடந்தேதான்
ஆண்டவன் பேற்றை அடை**

**பொருள்:** வீண்விரயம் கர்வம் (மமதை) போன்றவற்றைத் தவிர்த்து நடப்போர்க்கு இறையருள் கிட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. **கொடுமையோன் என்றறிந்தே காட்டும் இசைவை தடுக்குதே இஸ்லாம் தெரி**

**பொருள்:** ஒருவன் கொடுமையானவன் என்றறிந்தும் அவனுக்குக் கொடுக்கும் ஒத்துழைப்பை இஸ்லாம் தடுக்கின்றது

83. **கொடுமைக்கோ ஆட்பட்டோன் கேட்கும் இறைஞ்சல் தடுப்பின்றி நாயகனைத் தாவும்.**

**பொருள்:-** கொடுமைக்கு உட்பட்ட ஒருவன் இவைனிடம் பிராத்திக்கின்ற போது அவ் இறைஞ்சல் எந்தவிதமன தடையுமின்றி இறைவனிடம் போய்ச் சேருகின்றன.

84. **அடுத்தவர் தேவை அகற்றும் நபர்க்கோ கொடுக்கும் இறையும் கொடை.**

**பொருள்:** பிறருடைய தேவைகளை நிறைவு செய்யும் மனிதனுக்கு இறைவனின் உதவி கிட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**85.** **மரண நினைவினிலே மண்மீதில் வாழ்தல்**
**பரந்த நலனாம் பகர்**

**பொருள்:** ஓர் மனிதன் தன்மரணத்தை நினைத்த வண்ணம் உலகில் வாழ்கின்ற பொழுது அவனுக்குப் பல வகையான நன்மைகள் ஏற்படுகின்றன.

**86.** **மரணத்தின் சிந்தை மனதில் துருவின்**
**வரவை விரட்டும் விரைந்து**

**பொருள்:** மரணத்தை பற்றிய நினைவானது ஓர்மனிதனின் உள்ளத்தில் தீய எண்ணங்கள் ஏற்படாமல் தடுக்கும்.

**87.** **நாயன் அடியார் நவிலாரே பொய்ச்சாட்சி**
**தூயநெறி நிற்பர் துணிந்து**

**பொருள்:** இறைவனுடைய நல்லடியார்கள் ஒருபோதும் பொய்ச்சாட்சி சொல்ல மாட்டார்கள் தூயநெறியில் தம்வாழ்வை கடத்துவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. இறையோனை உள்ளம் இருத்தா மனிதன்
நிறையிலான் மாய்ந்தோனே நம்பு

பொருள்: இறையோனின் நினைவைத் தன்உள்ளத்தில் கொண்டிராத மனிதன் குறையுடைய மனிதனாய் இறந்த மனிதனாய் கருதப்படுவான்.

89. தாரத்தின் நற்கணவன் தானேதான் உங்களிலே
பூரணத்து மாந்தன் புரி

பொருள்: தன் மனைவிக்கு சிறந்தநற் கணவனாக இருப்பவன் தான் பூரணமான மனிதனாவான்.

90. தன்னுடைய தாரம்மேல் தான்கொள் உரிமைபோல்
அன்றோ அவளுரிமை ஆய்

பொருள்: ஒருவனுக்கு தன் மனைவிமேல் உள்ள உரிமையைப் போன்றே மனைவிக்கும் தன் கணவன் மேல் உரிமையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. தன்னை இறைக்காகத் தாழ்த்தும் மனிதனை
நன்கே உயர்த்துமே நாயன்

பொருள்: ஒரு மனிதன் இறைவனுக்காகத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் போது அம்மனிதனை இறைவன் உயர்த்திவிடுவான்.

92. தனவந்தர் தர்மம் தலைவர்தம் நீதி
கனத்த அழகவர்க்கே காண்

பொருள்: செல்வந்தர்களுக்கு தர்மமும், தலைவர்களுக்கு நீதியும் மிகச்சிறந்த அழகாகும்.

93. நற்பொறுமை ஏழ்மைக்கும், நாணமது பெண்மைக்கும்
உற்றபெரும் மாண்பாம் உணர்

பொருள்: ஏழைகளுக்கு பொறுமையும் பெண்களுக்கு நாணமும் மேன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. **ஆதியும் நல்லழகை ஆசிக்கும் ஆதலால்**
**போதியதாய் அவ்வழகைப் பேண்**

**பொருள்:** இறைவன் அழகை விரும்புவதனால் எல்லா
விடயத்திலும் அழகை பேணி நட.

95. **பெற்றோர்க்கே நோவினை பண்ணியோர் மாபாவம்**
**பற்றியோர் என்றே பகர்.**

**பொருள்:** தன்னுடைய பெற்றோர்களுக்கு நோவினை
செய்பவர்கள் பெரும் பாவம் செய்தவர்கள் ஆவார்கள்

96. **வழிப்போக்கன் போன்றே வையத்தில் வாழும்**
**வழியினைப் பற்றியே வாழ்**

**பொருள்:** உலகில் ஓர் மனிதன் உலக ஆசைகளில்
மூழ்காமல் வழிப்போக்கனைப் போல வாழல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. **மண்ணுலக மாந்தர் மரணப் பிடியிலே**
**திண்ணமாய் ஆட்படுவர் தான்**

**பொருள்:** உலகில் பிறந்த எல்லா மக்களும் நிச்சயமாக மரணத்தை அடைந்தே தீர்வர்.

98. **வேடிக்கை வீணாம் விளையாட்டு என்பவைகள்**
**கூடியதாய்ப் பூவுலகைக் கூறு**

**பொருள்:** வேடிக்கையும் வீண் விளையாட்டும் நிறைந்ததுதான் இவ்வுலக வாழ்க்கையாகும்.

99. **அகதி அனாதையர் ஆதரவின் இல்லம்**
**இகத்தினில் மேலாம் இயம்பு**

**பொருள்:-** அகதிகளையும் அனாதைகளையும் ஆதரித்து உபசரிக்கின்ற வீடுகள் தான் இவ்வுலகில் மேலான வீடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**100.** **இறைநேசம் பேராசை இவ்விரண்டும் ஒன்றாய்**
**நிறைந்திரா ஓர்உளம் நம்பு**

**பொருள்:-** ஒரு மனிதனுடைய உள்ளத்தில் இறைநேசமும் பேராசையும் ஒன்றாக நிறைந்திருக்க மாட்டாது. ஏதாவது ஒரு தன்மை தான் இருக்கும்.

**101.** **பேராசை பாவம் புரிந்திடவே தூண்டுவதால்**
**வாராது காத்திது வாழ்**

**பொருள்:** ஒரு மனிதனில் ஏற்படும் பேராசையானது அவனைப் பாவமான காரியங்களைச் செய்யத்தூண்டும் அதனால் உள்ளத்தில் பேராசை கொள்ளாமல் வாழ்

**102.** **இரந்தேதான் உண்ணல் இழிவாம் இகத்தில்**
**கரத்தால் உழைத்துணவு கொள்**

**பொருள்:** உலகில் இரந்து உண்ணுதல் இழிவாகும் உழைத்து உண்பதே மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103. **குடும்ப நலனைதைக் காக்க உழைப்பின்**
**எடுக்கும் வணக்கமாய் ஏகன்**

பொருள்: தன் குடும்பத்தவர்களின் நலனுக்காக ஒருவன் உழைக்கும் போது அவனுடைய உழைப்பை இறைவன் வணக்கமாக ஏற்றுக்கொள்வான்

104. **இன்னல் வேளை இனிதே பொறுமையை**
**நன்றெனப் பற்றி நட**

பொருள்: இன்னல் வருகின்ற வேளையிலே பொறுமையுடன் இருந்து அவற்றைத் தாங்கிக் கொள்ளல் வேண்டும்.

105. **உறக்கம் மரணத்தின் ஓர்சிறு பாகம்**
**சிறப்பாய் இதைநீயும் சிந்தி**

பொருள்: உறக்கமானது மரணத்தினுடைய சிறுபாகமாக இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**106.** **செயலெல்லாம் எண்ணச் செயற்பாடாய்த் தேர்ந்தே**
**உயரிய எண்ணத்தில் ஓங்கு**

**பொருள்:** எண்ணத்தின் செயற்பாடாகவே செயல்கள் யாவும் இருக்கின்றன. எனவே உளத்தில் நல்ல எண்ணத்தை கொள்ளல் வேண்டும்.

**107.** **ஏழைகளை நேசித்தல் ஏற்றமாம் சொர்க்கம்**
**அழைக்கும் செயலாம் அறி**

**பொருள்:** ஏழைகளை நேசித்தல் சொர்க்கம் பிரவேசிக்கும் பாதையாக இருக்கின்றது.

**108.** **வறியோரின் தேவை வனப்பாகத் தீர்க்கும்**
**நெறியாரை நாயனும் நாடும்**

**பொருள்:** ஏழைகளின் தேவைகளை மனமுவந்து தீர்க்கின்றவர்களை இறைவன் உவப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

109. இறைமறுமை ஏற்றோர்தான் ஈயும் விருந்தால்
நிறைவுறுவர் தானே நினை

பொருள்: இறைவனையும் மறுமையையும் ஏற்றவர்கள்
விருந்தோம்பல் செய்வதில் மகிழ்ச்சியடைவார்கள்

110. கடனாளி என்றொருவன் காசினி நீங்கும்
விடயம் இழிவே விலம்பு

பொருள்: கடனாளியாக ஒருவன் இவ்வுலகை விட்டு நீங்குதல்
மிகவும் இழிவான செயலாகும்.

111. பெற்ற கடனைதப் பேணுதலாய்த் தீர்க்காதான்
உற்றபெரும் கள்வன் உணர்

பொருள்: வாங்கிய கடனை முறைப்படி திரும்பச்
செலுத்தாதவன் பெரும் திருடன் ஆவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**112.** **தீயதாம் கட்டளைக்கோ தாழ்பணிதல் ஆகாதே**
**தூயநல் ஆணைக் அடங்கு**

**பொருள்:** தீமையான கட்டளைக்கு அடிபணிதல் கூடாது. மாறாகத் தூய்மையான நல்ல கட்டளைகளுக்கு அடங்கி நடத்தல் வேண்டும்.

**113.** **பெற்றோர்க்குக் கீழ்ப்படியாப் பாதகத்தை என்றுமே**
**பற்றிடவே வேண்டாம் பகர்**

**பொருள்:** பெற்றோர்களுக்குக் கீழ்படிந்து நடக்காத பாதகத்தை என்றுமே செய்யாதே

**114.** **நன்நெறியை நல்லோர்க்கே நன்கேதான் காட்டுகிற**
**உன்னதமாம் குர்ஆன் உணர்**

**பொருள்:** நல்லவர்களுக்கு நன்நெறியை காட்டுகின்ற உன்னதம் மிக்கதுதான் குர்ஆன் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**115.** **அச்சமது தந்ததேதான் அல்குர்ஆன் தீயோரை**
**எச்சரிக்கும் என்றேதான் ஏர்**

**பொருள்:-** தீயோர்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவையாக புனித குர்ஆன் இருக்கின்றது.

**116.** **பிறரின் இடரில் பிரியமே கொள்ளாச்**
**சிறப்பாம் செயலில் சிற**

**பொருள்:** பிறருக்கு ஏற்படும் இன்னலைக்கண்டு மகிழ்ச்சியடையாமல் வேதனைப்படுகின்ற உயரிய தன்மையுடையவனாக வாழ்.

**117.** **அமைதி நிலவ அரும்பணி ஆற்றல்**
**அமையுமுயர் தர்மமாய் ஆய்**

**பொருள்:** அமைதியை நிலைநாட்டப் பாடுபடுதல் உயரிய தர்மமாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**118.** **துன்பத்திற் ஆட்பட்டோன் தூயோனை இறைஞ்சிடின்**
**நன்கேற்கும் நாயகனும் நம்பு**

**பொருள்:** துன்பத்திற்கு இலக்காகியவன் அதுபற்றி இறைவனிடம் இறைஞ்சினால் இறைவன் அதனை ஏற்றுக்கொள்வான்.

**119.** **தன்னுடைய சுற்றத்தைத் தள்ளியோன் வாழ்வுக்கோ**
**இன்னருளை ஈயா இறை**

**பொருள்:** தன்னுடைய குடும்ப உறவினர்களோடு உறவின்றி தூரமாக வாழ்பவனுக்கு இறைவன் அருள்புரிய மாட்டான்.

**120.** **பாவத்தில் சிந்தனையைப் பாங்காய்ச் செலுத்திடின்**
**கேவலம் நீங்கு(ம்)முனில் காண்**

**பொருள்:** பாவம் செய்வதனால் ஏற்படும் கேவலமான நிலைமையைப் பற்றிச் சிந்திக்கும் போது கேவல நிலைமை எம்மை விட்டும் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121. தொழுகை சுவர்க்கத் திறப்பெனத் தேர்ந்தே
வழுவா நிலைதொழுது வாழ்

பொருள்: தொழுகையானது சுவர்க்கத்தின் திறவுகோலாக இருக்கின்றது. அதனால் தவறாமல் தொழுகையை பேண்

122. நயவஞ்சத் தன்மையோர் நட்பைத் தவிர்த்து
உயர்ந்தோர் உறவதை ஓம்பு

பொருள்: நயவஞ்சகத் தன்மை பொருந்தியவர்களுடனான உறவைத் தவிர்த்து உன்னத தன்மை கொண்டவர்களுடனான உறவைப் பேண்.

123. முந்தி முகமன் மொழிவோர்க் இறையும்
தந்திடும் தன்உவப்பைத் தான்

பொருள்: முகமன் கூறுவதில் முந்துபவர்கள் மேல் இறைவன் தன்னுடைய உவப்பைச் செலுத்துகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**124.** **நன்றிமிக்க உள்ளத்தை நல்லபெரும் செல்வமாய்**
**நன்கேற்று வாழல் நலம்**

**பொருள்:** நன்றிமிக்க உள்ளத்தைப் பெரும் பேறாக எண்ணி வாழல் வேண்டும்

**125.** **நன்றியதை மாந்தர்க்கே நல்காதார் நாயனுக்கே**
**நன்றி செலுத்தார் நவில்**

**பொருள்:** மனிதர்களுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கும் நன்றி செலுத்த மாட்டான்.

**126.** **பிறர்மீது வீண்பழி பேசுவோன் செல்லான்**
**சிறப்புறு சொர்க்கமாம் சொல்**

**பொருள்:** பிறர்மீது வீண்பழி சொல்பவன் சுவர்க்கம் செல்ல மாட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**127.** **தன்பாவம் எண்ணித் தவித்திடும் மாந்தனோ**
**சென்றடைவான் சொர்க்கமே சொல்**

பொருள்: தான்செய்த பாவத்தை நினைத்து வருந்துபவன் சுவர்க்கம் சென்றடைவான்

**128.** **நெருப்பை அணைத்திடும் நீர்போன்று தர்மம்**
**அருக்குமே பாவத்தை ஆய்**

பொருள்:- நெருப்பை நீரானது இல்லாமல் செய்வது போல் (அணைத்தல்) தர்மம் பாவத்தை நீக்குகிறது.

**129.** **நன்மையைச் சுட்டி நவின்றிடும் மாந்தனுமோ**
**நன்மையைச் செய்தோனே நம்பு**

பொருள்: ஓர் விடயத்தில் நன்மையைக்குறித்து சொல்கின்ற மனிதன் நன்மையைச் செய்தோன் போன்றாவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. மனிதகுல நன்மைக்காய் மண்ணுலகச் சேவை
இனிதாம் மறுமைக் இயம்பு

பொருள்: உலகில் மனிதகுல நன்மைக்காகச் செய்கின்ற சேவைகள் மறுஉலக வாழ்வுக்கு நன்மை பயக்கும்.

131. பொருள்மீதாம் ஆசை புவியினிலே என்றும்
உருவாக்கும் வஞ்சகம் ஊகி

பொருள்: ஒருமனிதனில் உருவாகும் பொருள் மீதான ஆசை அவன் உள்ளத்தில் வஞ்சகத்தை உருவாக்கும்

132. இறையிடத்தே மைந்தனுக்காய் இன்னருந் தந்தை
இறைஞ்சிடின் ஏற்கும் இறை

பொருள்: ஒரு தந்தை இறைவனிடத்தில் தன் மகனுக்காக இறைஞ்சினால் அவ்இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

133. விபச்சாரப் பாவத்தை விஞ்சும் புறமே
உபதேசி என்றும் உணர்ந்து

பொருள்: விபச்சாரப்பாவத்தை விடவும் கூடியது புறம் பேசுவதாகும்.

134. இறைக்காய் உயிரை இழத்தலினும் பெற்றோர்
குறைதீர்த்தல் மேலாமே கூறு

பொருள்: இறைவனுக்காக உயிரைத் தியாகம் செய்வதை விடவும் தம் பெற்றோர்களுக்கு உதவி புரிதல் மேலானது.

135. பெற்றோர்க்கே நன்றியாய்ப் பிள்ளைகள் வாழ்ந்திடல்
நற்கடனாம் என்றே நவில்

பொருள்: பெற்றோர்களுக்கு நன்றியுடையவர்களாக வாழல் பிள்ளைகளது கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**136.** **நோய்கள் வருமுன்னே நற்பேறாய் உன்நலத்தை**
**ஆய்ந்தேதான் நற்பணிகள் ஆற்று**

**பொருள்:** நோய்வருவதற்கு முன்பாக உடல் நலத்தைப் பெரும் பேறாக கருதி நற்பணிகள் புரி

**137.** **பற்றிடமுன் ஏழ்மை பயனுள்ள காரியங்கள்**
**பெற்றவுன் செல்வத்தால் பற்று**

**பொருள்:** ஏழ்மை நிலை வருவதற்கு முன்பாக நீ பெற்றுள்ள செல்வத்தைக் கொண்டு நன்மைபயக்கக்கூடிய நல்ல காரியங்களைச் செய்துகொள்.

**138.** **பாவங்கள் செய்வதற்கோ பக்கதுணை என்றன்றே**
**ஆவதுதான் போதைமது ஆய்**

**பொருள்:** போதை மிக்க மதுவை அருந்தினால் அது பாவங்கள் புரிய மனிதனைத்தூண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**139.** **மரண நினைவினிலே மண்ணுலகில் வாழின்**
**பரந்தபெரும் நன்மையே பார்**

**பொருள்:** மரணத்தின் நினைவோடு மண்ணுலகில் வாழ்கின்றவர்கள் பெரும் நன்மையடைவார்கள்

**140.** **புதைகுழியைப் போயேதான் பார்த்தல் மரணக்**
**கதையை நினைவூட்டும் காண்**

**பொருள்:-** புதைகுழியை (மண்ணறையை) தரிசிக்கும் போது மரணத்தின் நினைவு ஏற்படும்.

**141.** **மருந்தின்றி எந்நோயும் மண்ணுலகில் இல்லை**
**அருளிது நாயகனின் ஆய்**

**பொருள்:** மருந்தில்லாத எந்த நோயும் உலகில் கிடையாது. மருந்தைப் படைத்தது இறைவனுடைய அருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

142. இவ்வுலக மீதினில் இச்சையே கொண்டிடுவோன்
அவ்வுலகில் தாழ்வுறுவான் ஆய்

பொருள்: இவ்வுலகப்பற்றில் வாழ்ந்திடுவோன் மறுவுலகில் தாழ்நிலை அடைவான்.

143. உலகினது செல்வத்தில் உன்னதமே ஆகும்
நலஒழுக்கத் தாரம் நவில்

பொருள்: இந்த உலகத்தின் செல்வங்களில் மிகவும் உயரியது நல்லொழுக்கம் மிக்க மனைவியாகும்.

144. கண்ணியமாய் மூத்தோரை காப்போன் முதுமையில்
கண்ணியமே கண்டிடுவான் காண்

பொருள்: முதியவர்களைக் கண்ணியமாக மதித்திடுவோன் தனது முதுமைநிலையில் கண்ணியம் பெற்றிடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145. மலர்ந்த முகமாய் மிளிரும் நரரை
நலமே உவந்திடும் நாயன்

பொருள்: மலர்ந்த முகத்துடன் இருப்பவர்களை இறைவனும் விரும்புகின்றான்

146. இன்னல்கள் தாங்கி இனிதே முயல்வோர்க்கோ
நன்றே உதவுமே நாயன்

பொருள்: இன்னல்களைத் தாங்கிக்கொண்டு நல்ல காரியங்களில் முயற்சி செய்பவர்களுக்கு இறைவனும் உதவிபுரிவான்

147. எவருடைய நாகரத்தால் ஏற்றமுறின் மாந்தர்
அவரே முழுமுஸ்லிம் ஆம்

பொருள்: எவருடைய நாவினாலும் கரத்தினாலும் மனிதர்கள் நன்மையடைவார்களோ அவரே முழுமையான முஸ்லிமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

148. கட்டிடத்தின் கல்போல் கருமையாம் ஒற்றுமைக்
உட்பட்டோர் முஸ்லிம்கள் ஊகி

பொருள்:- ஓர் கட்டடத்தில் உள்ள கற்கள் எவ்வாறு ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருக்கின்றதோ அதே போல் முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும்.

149. உனக்காய் விரும்புகிற ஒன்றைப் பிறர்க்கும்
மனதால் விரும்பி மகிழ்

பொருள்: உனக்காக நீ விரும்புகின்ற ஒன்றைத்தான் பிறருக்கும் நீ விரும்பு

150. வட்டிதனை விட்டும் விலகியே வாழ்ந்திடில்
கிட்டிடும் நன்மையே காண்

பொருள்: வட்டிதனை வாழ்வில் விலக்கி வாழ்ந்திடில் பலவகையான நன்மைகள் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

151. சான்றோரின் இவ்வுலக சன்மானம் என்றன்றோ
தோன்றுமே ஏழ்மையது தான்

பொருள்: நல்லவர்களுக்கு இவ்வுலகத்தில் வறுமை ஏற்படுவது அவர்களுக்கு கிடைக்கும் சன்மானமாகும்.

152. எத்தகைய இன்னலை ஏற்றேனும் வாக்குறுதி
அத்தனையும் காத்தல் அழகு

பொருள்: வாழ்வில் எத்தகைய இன்னல்கள் ஏற்பட்டாலும் அத்தனையும் தாங்கி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றல் சிறப்பானது.

153. உலகோ பெருஞ்செல்வம், உன்னதமோ இங்கே
நலமான நற்பெண்ணாம் நம்பு

பொருள்: இந்த உலகம் பெரும் செல்வம் நிறைந்ததாகும். இதில் உயரிய செல்வம் நல்லொழுக்கமுள்ள மனைவி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

154. உன்னத அந்தஸ்த்து உண்மையுள வாணிபனைச்
சென்றடையச் செய்யுமிறை சொல்

பொருள்: மறுமையில் உயரிய அந்தஸ்த்தை உண்மையான வியாபாரிக்கு இறைவன் வழங்குவான்

155. நீரோடை ஈர்அளவு நற்செல்வம் பெற்றிடினும்
பாரோர்க் இவைபோதா பேசு

பொருள்: இரண்டு நீரோடை அளவு பெரும் செல்வத்தை ஒருவன் பெற்றிருந்தாலும் இவை போதாது என்றுதான் அவன் கூறுவான்

156. நாயனது அச்சத்தால் நன்கே அழுவோரை
நேயமாய் நோக்குமிறை நம்பு

பொருள்: இறைவனுடைய அச்சத்தால் அழுகின்ற மனிதனுக்கு இறைவனுடைய அருள் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

157. கொத்துகிற பாம்பாய் கொடுக்காத ஸக்காத்தின்
சொத்தாகும் அவ்வுலகில் சொல்

**பொருள்:** ஸக்காத் கொடுக்கவேண்டிய கடமை இருந்தும் கொடுக்காது பதுக்குகின்ற சொத்துக்கள் நாளை மறுமையில் பாம்பாக மாறி குறித்த நபரைத் தீண்டும்.

158. மோசடி வர்த்தகத்தை மாமறை விட்டிடக்
கோசம் இடுவதனைக் கேள்

**பொருள்:-** வர்த்தகத்தில் மோசடி செய்வதனை தவிர்க்குமாறு இஸ்லாம் கட்டளை இடுகின்றது.

159. வட்டிக் அழிவதனை வல்லோன் வழங்குவதால்
விட்டதனை வாழ்வில் விளங்கு

**பொருள்:** வட்டிக்கு இறைவன் நாசத்தையே வழங்குவதால் வட்டிதனைத் தவிர்த்து வாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. வானம் நிலமும் வகையாம் படைப்பினமும்
ஆனபெரும் சான்றறிவார்க் ஆய்

பொருள்: வானமும் பூமியும் மற்றுமுள்ளபடைப்பினங்களும் சிந்திப்பவர்களுக்கு பெரும் சான்றாக இருந்து கொண்டிருக்கின்றது.

161. நன்மை புரிய நரர்களை ஏவுதல்
உன்னதம் என்றே உணர்

பொருள்: நன்மையான காரியங்களில் ஈடுபடும்படி மக்களுக்கு உரைத்தல் நன்மைமிகு செயலாகும்.

162. மன்னித்தல் பண்பதனை மேவி நடந்திடல்
உன்னதம் ஆகும் உணர்

பொருள்: பிறர் செய்யும் தவறை மன்னித்தல் மிகவும் உன்னதமான பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

163. இரவுபகல் மாற்றத்தில் இன்னரும் சான்றை
பரந்தறிஞர் பெற்றிடுவர் பார்

பொருள்:- இரவும் பகலும் உலகில் மாறிமாறி வருவதில் பல அத்தாட்சிகள் இருப்பதை அறிவுடையோர் புரிந்து கொள்வர்.

164. ஏகனவன் தீர்ப்பில் எவர்க்கும் அநீதியது
ஆகஅவன் செய்யான் அறி

பொருள்: இறைவன் தன் தீர்ப்பில் எவருக்கும் அநீதி இழைக்க மாட்டான்

165. வாழ்வில் மறுமையின் வாழ்வே நிலையென்ற
ஆழ்ந்ததோர் உண்மையை ஆய்

பொருள்: இவ்வுலக வாழ்வு நிலையற்றது மறுவுலக வாழ்வே நிலையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**166.** **வழிப்போக்கன் போன்றே வையத்தில் வாழ்ந்து**
**அழிவில்லாச் சொர்க்கம் அடை**

**பொருள்:** வழிப்போக்கனை போல இவ்வுலகில் பற்றற்று வாழ்ந்து அழிவில்லாத மறுவுலக வாழ்வின் சொர்க்கத்தை அடைந்து கொள்.

**167.** **ஒவ்வொரு ஆத்மாவும் ஓர்நாள் மரணத்தை**
**இவ்வுலகில் காணும் இயம்பு**

**பொருள்:** இவ்வுலகில் பிறந்த ஒவ்வோர் உயிரும் மரணத்தை அடைந்தே தீரும்.

**168.** **சக்தித்தனுக் ஏற்பச் சிறிதேனும் தர்மத்தை**
**தக்கதெனச் செய்தே திகழ்**

**பொருள்:** ஒவ்வொருவரும் தனது தகுதிக்கேற்ப சிறிதளவாவது தர்மம் செய்தல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**169.** **தன்கரத்தால் தேடித்தான் தின்னும் உணவது**
**உன்னதம் என்றே உணர்**

**பொருள்:** ஒருவன் தன்கரத்தால் உழைத்து உண்பதுதான் உயரியது

**170.** **ஈச்சங் கனிப்பாகம் ஈந்தேனும் தப்பிடுவீர்**
**தீச்சூழ் நரகேகாத் தான்**

**பொருள்:** ஈச்சங்கனியினுடைய சிறுபாகத்தையேனும் தர்மம் செய்வதன் மூலம் தீயினால் சூழப்பட்ட நரகத்தைச் சென்றடைவதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

**171.** **இறைக்கிணை வைத்திடுவோர் இப்பதி நீங்கின்**
**கறைநரகே ஏகுவர் காண்**

**பொருள்:** இறைவனுக்கு இணை வைப்பவர்கள் இவ்வுலகை விட்டுப்பிரியின் நரகே செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172. உலகினிலே செய்கின்ற ஒவ்வோர் செயலின்
பலனெல்லாம் அவ்வுலகே பார்

பொருள்:- உலகில் செய்கின்ற செயல்களின் பிரதிபலன் யாவும் மறு உலகிலே கிட்டும்

173. உகத்மலைபோல் செல்வம் உரித்தே எனினும்
அகநிறைவு மாந்தருறார் ஆய்

பொருள்: உகத்மலைபோன்று பெரும்செல்வம் ஒருவனுக்குக் கிடைத்தாலும் அது போதும் என்று அவன் உளம் நிறைவடையமாட்டான்.

174. பாதமது வீங்கிப் பருக்கும் அளவுக்காம்
நாதர் நபிதொழுதார் நம்பு

பொருள்: தங்கள் கால்கள் வீங்கிப் பருக்கும் அளவுக்கு முகம்மது நபி(ஸல்) அவர்கள் நெடுநேரம் நின்று தொழுவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**175.** **இறைமீது நம்பிக்கை இப்பதியில் கொள்ளின்**
**நிறைவாய் இறைபோதும் நம்பு**

**பொருள்:-** இறைவன் மீது நம்பிக்கை கொள்வோர்க்கு இறைவனே போதுமானவன்

**176.** **செல்வத்தில் மேலோரைச் சிந்தையிலே கொள்ளாமல்**
**இல்லாரை உள்ளம் இருத்து**

**பொருள்:** ஒருவன் தன்னிடமுள்ள செல்வத்தைவிட அதிகமான செல்வம் உள்ளவனைப்பற்றிச் சிந்திக்காமல் தன்னை விடவும் செல்வத்தில் கீழ்நிலையில் உள்ளோரைப் பார்க்க வேண்டும்.

**177.** **மனிதர் அறியா மறைவாம் விடயம்**
**இனிதே அறியும் இறை**

**பொருள்:** மனிதர்களால் அறியமுடியாத எல்லா மறைவான விடயங்களையும் இறைவன் நன்கறிவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**178.** **தன்கணவன் செல்வம் தகுமுறை காத்திடுதல்**
**உன்னதமாம் மாதுக் உணர்**

**பொருள்:** தன்கணவனுடைய சொத்துக்களை நல்ல முறையில் பாதுகாத்தல் மனைவியின் கடமையாகும்.

**179.** **நயவஞ்சர் சாவுறின் நன்றல்ல மையித்**
**உயர்தொழுகை ஆற்றல் உணர்**

**பொருள்:** நயவஞ்சகர்கள் மரணமுற்றால் அவர்களுக்காக மைய்யித் தொழுகை (ஜனாசா தொழுகை) தொழுதல் உகந்ததல்ல

**180.** **இறைக்கே இணைவைத்து இப்பார் துறப்போர்**
**கறைநரகே ஏகுவார் காண்**

**பொருள்:** இறைவனுக்கு இணைவைப்போர் இவ்வுலகைவிட்டு பிரிந்தால் நரகமே சென்றடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181. நோயாளி தம்மை நலமறிந்து வாழ்கின்ற
தூயதாம் பண்பில் துலங்கு

பொருள்: நோயாளர்களை தரிசித்து அவர்கள் நலமறிகின்ற நல்ல பண்பைக் கடைப்பிடித்து வாழ்

182. விருந்துக்காய் உன்னை விரும்பி அழைப்பின்
பொருந்தியே போகுதல் பேண்

பொருள்: எவரேனும் உன்னை விருப்பமுடன் விருந்துக்கு அழைத்தால் அவ்விருந்தில் கலந்துகொள்.

183. மைய்யித்தைப் பின்தொடரும் மாண்பின் செயலாலே
உய்வுண்டே மாந்தர்க் உணர்.

பொருள்: இறந்த உடலை (ஜனாசாவை) நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லும் போது அதை பின்தொடர்ந்து செல்லும் செயலால் மனிதர்களுக்கு அதிக நன்மையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

184. கொடுமைக்கே ஆட்பட்ட காசினி மாந்தர்
விடுதலை காணல் விரும்பு

பொருள்: கொடுமைக்கு உட்பட்ட மக்கள் அதிலிருந்து விடுதலை பெறலை விரும்புதல் வேண்டும் அதற்குதவவும் வேண்டும்.

185. தங்கம் அணிதல் தடையாகும் ஆண்களுக்கே
பங்கம் அவர்க்கதுவாம் பார்

பொருள்: தங்கள் அணிவதால் ஆண்களுக்கு பல தீங்குகள் ஏற்படும். அதனால் இதை அணிவது ஆண்களுக்கு தடையாகும்.

186. பட்டாடை பூணுதல் பாதகம் ஆண்களுக்காம்
விட்டதை நீக்கியே வாழ்

பொருள்: பட்டாடை அணிதல் ஆண்களுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் அதனால் அதை ஆண்கள் அணியக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

187. **மூன்றுதன் பாலர் மரணமுறின் அம்முஸ்லிம்**
**தான்செல்வான் சொர்க்கம் தெரி**

**பொருள்:** ஒரு முஸ்லிமுக்கு மூன்று குழந்தைகள் மரணமடையுமாயின் அம்முஸ்லிம் அக்குழந்தைகள் மீது கொண்ட இரக்கத்தின் காரணமாக அவன் சுவர்க்கம் செல்வான்

188. **தற்கொலையை இஸ்லாம் தடுப்பதனால் அச்செய்கை**
**பற்றாது வாழ்ந்தடைவாய் பேறு**

**பொருள்:** இஸ்லாம் தற்கொலை செய்வதைப் பெரும் குற்றமாக கருதுகின்றது. அதனால் அச்செயலைத் தவிர்த்து வாழ்.

189. **இறைக்கிணை வைக்கும் இழிந்தோர்க் இறைஞ்சல்**
**முறையல்ல என்றே முழங்கு**

**பொருள்:** இறைவனுக்கு இணை வைக்கின்றவர்களின் நலனுக்காக இறைஞ்சுதல் தகாத செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**190.** **ஆயுள் பொருளிலே ஆசை அதிகமாய்**
**பாயுமே மாந்தரில் பார்**

**பொருள்:** மனிதர்களின் உள்ளத்தில் நீண்டகாலம் வாழும் ஆசையும் செல்வத்தின் மீதான ஆசையும் அதிகமாய் இருந்து கொண்டிருக்கும்

**191.** **பொருளினில் ஆயுளில் பாரில் முதியோர்**
**இருப்பதோ என்றும் இளமை**

**பொருள்:** முதியோர்கள் பொருள்மீதான ஆசையிலும் நீண்ட ஆயுள் ஆசையிலும் இளமைத் தன்மை உடையவர்களாகவே இருப்பர்

**192.** **ஊர்ஜிதம் இல்லாத ஓர்விடயம் கூறலை**
**பார்மீதில் நீக்கிடப் பார்**

**பொருள்:** ஊர்ஜிதம் இல்லாத ஒரு விசயத்தைக் கதைப்பதனைத் தவிர்த்துக் கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193. மரணத்தை வேண்டி மனிதர் இறைஞ்சப்
பரந்ததடை மார்க்கத்தில் பார்

பொருள்: தனக்கு மரணத்தை வழங்குமாறு இறைவனிடம் யாரும் இறைஞ்சக்கூடாது.

194. மரணத்துச் சாசனத்தை மாண்பாய் எழுதல்
பரந்ததோர் நன்மையாம் பேசு

பொருள்: ஒருவர் தம் இறுதி வேளையில் மரண சாசனம் எழுதுவித்துச் செல்லல் பலவகையிலும் நன்மை பயக்கும்.

195. பாரின் செயலின் பலனை மறுமையில்
நேரிலே கண்டிடுவாய் நம்பு

பொருள்: உலகில் ஒருவன் செய்கின்ற செயலின் பிரதி பலனை மறுமையில் அவன் தன் கண்கூடாகக் கண்டு கொள்வான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

196. பொறுமையின் மாந்தர் பெரிதாக நன்மை
பெறுவரே என்றும் பகர்

பொருள்: பொறுமையைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள்
பெரும் நன்மையடைவார்கள்

197. நன்றி நிறைந்திட்ட நல்லடியான் என்றிறைக்கே
என்றும் இருந்தடை ஏற்றம்

பொருள் :- இறைவனுக்கு நன்றியுடையவனாக வாழ்ந்து அவன்
அருளைஅடைந்து கொள்.

198. போதுமென்ற உள்ளம் பெரியதோர் செல்வமாய்
ஓதும் நபிமொழி ஓம்பு

பொருள்: போதுமென்ற உள்ளமே பெரும் செல்வம் என
நபி(ஸல்)அவர்கள் கூறியுள்ளதால் அந்த நபிமொழியை
ஏற்று அதன்படி வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

199. **பிணக்கது கொள்ளின் பலமது குன்றும்**
**இணக்கம் பலமே இயம்பு**

**பொருள்:** தங்களுக்குள் பிளவுபட்டுக் கொள்பவர்கள் பலம் குன்றிப் போவார்கள் ஒற்றுமையாய்ச் செயற்படின் அதுவே பலமாகிவிடும்

200. **கலந்தேதான் பேசுவதால் காணும் முடிவு**
**நலமாய் அமையும் நவில்**

**பொருள்:-** தங்களுக்குள் கலந்தாலோசனை செய்து எடுக்கும் முடிவுகள் எப்போதும் நல்ல முடிவுகளாக அமையும்

201. **பதவியது கேளாமல் பெற்றால் இறையும்**
**உதவிதனை நல்கும் உணர்**

**பொருள்:-** ஒருவன் தான் கேளாமலே அவனுக்குப் பதவி வழங்கப்படுமாயின் அவனுக்கு இறைவனுடைய உதவி கிட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**202.** **வீண்ஊகம் ஓர்போதும் வையத்தில் உண்மையைக்**
**காண்பதற்கோ வைக்காது காண்**

**பொருள்:-** வீண ஊகங்கள் உண்மைகளை அறிந்து
கொள்ள உதவாது

**203.** **பதவிதனை கேட்டடைதல் பண்பல்ல நாயன்**
**உதவியதும் கிட்டா உணர்**

**பொருள்:-** உருவன் தனக்கு பதவி வழங்குமாறு கேட்டுப் பெறுதல்
நல்லதல்ல. கேட்டு பதவியை அடைந்து
கொள்பவனுக்கு இறைவன் உதவமாட்டான்.

**204.** **தகுதி இலார்க்கோ தருமாம் பதவி**
**தகுந்ததல இஸ்லாத்தில் தான்**

**பொருள்:-** தகுதி இல்லாதவர்களுக்குப் பதவிகள்
வழங்கப்படுவதை இஸ்லாம் தடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**205.** **மார்க்கத்துப் பற்றினில் மேன்நிலை மங்கையைத்**
**தேர்ந்து மனத்தல் திரு**

**பொருள்:-** மார்க்கப்பற்றில் உயர்ந்த பெண்ணைத் திருமணம் செய்தலே சிறப்பாகும்

**206.** **பாவத்தைப் போக்கும் பரிகாரம் என்றேதான்**
**ஆவது நற்தொழுகை ஆய்**

**பொருள்:-** தொழுகையானது பாவத்தைப் போக்கும் சாதனமாக இருந்துகொண்டிருக்கின்றது.

**207.** **நீதி செலுத்திய நல்லரசன் அவ்வுலகில்**
**ஆதி அருள்பெறுவான் ஆய்**

**பொருள்:** மக்களுக்கு நீதி செலுத்திய அரசன் மறுமையில் இறைவனுடைய அருளை பெறுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**208.** **பதுக்கல் வணிகத்தைப் பற்றாதீர் என்றும்**
**அதுசெய்வோன் பாவியாம் ஆய்**

**பொருள்:-** விலையுயர்வைக் கருதி பதுக்கல் வணிகத்தை செய்தல் கூடாது அவ்வாறு செய்வோன் பாவி ஆவான்

**209.** **அருத்தோர் நிலத்தை அபகரிக்கும் செய்கை**
**கொடுமையாம் இஸ்லாத்தில் காண்**

**பொருள்:** பிறருடைய நிலத்தை அபகரித்தல் மாபெரும் கொடுமையாகும்.

**210.** **வட்டியை நீக்கியே வாழ்ந்திட வான்மறை**
**திட்டமாய்ச் சொல்லுதே தேர்**

**பொருள்:** வட்டியை தவிர்த்து வாழுமாறு இஸ்லாம் இயம்புவதை அறிந்துகொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**211.** **இலஞ்சம் கொடுத்தல் இதனைப் பெறுதல்**
**விலத்தியே வாழ்வில் விளங்கு**

**பொருள்:-** இலஞ்சம் கொடுத்தலையும் இலஞ்சம்
பெறுதலையும் தவிர்த்துக்கொள்

**212.** **இறையோனின் சாபம் இலஞ்ச நரரை**
**முறையாகப் பற்றும் மொழி**

**பொருள்:-** இலஞ்சத்தோடு தொடர்புடையவர்களுக்கு
இறைவனின் சாபம் உண்டாகும்.

**213.** **மக்கள் தலைவன்தன் மக்களது ஊழியனே**
**தக்கபணி ஆற்றுபவன் தான்**

**பொருள்:-** மக்களது தலைவன் அந்த மக்களுக்கு ஊழியம்
புரிபவனே ஆவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

214. தாம்விரும்பும் ஒன்றையே தன்னுடைய சோதரர்க்கும்
தாம்விரும்ப வேண்டும் தெரி

பொருள்: தான் விரும்புகின்ற ஒன்றைத்தான் மற்றவர்க்கும் அவர் விரும்ப வேண்டும்

215. இறைமறுமை ஏற்றோர் இனிதாம் விருந்தார்
நிறைவுறச் செய்வர் நவில்

பொருள்:- இறைவனையும் மறுமையையும் நம்பியவர்கள் தமது விருந்தாளிகளை மிகவும் நல்ல முறையில் உபசரித்தல் வேண்டும்.

216. அண்டை மனையார் அகமகிழும் வண்ணமாய்
மண்மீதில் வாழ்வதுவே மேல்

பொருள்:- பக்கத்து வீட்டாருடன் மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

217. அடைக்கலப் பண்டத்தை அன்னதன் சொந்தம்
உடையார்க்கே ஈந்து உயர்

பொருள்:- உன்னிடம் அடைக்கலமாக வழங்கப்பட்ட பொருளை அதன் சொந்தக்காரர்களிடம் மீளக்கொடுத்து இறைவனிடத்தில் உயர்வடைந்து கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சத்திய இஸ்லாமும் சாற்றியே நிற்கின்ற
உத்தமத் தன்மையில் ஓர் சிலதை – எத்தியே
வைத்திட்டேன் வெண்பா வடிவக் குறளிலே
அத்தனையும் ஆய்ந்தே அறி.

மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-41569-2-0

Printed by : A.R.T. Trinco 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org